இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

# ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம்

## திட்டப் பணியாளர்களை ஆட்சேர்த்தல்

### சிரேஷ்ட செயற்றிட்டப் பொறியியலாளர் - 01 பதவி

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தும் திட்டமானது உலக வங்கியினால் நிதியிடப்படும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்டச் செலவு 150 மில்லியின் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் 2024-2028ஆம் காலப்பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) பெறுகை சிரேஷ்ட செயற்றிட்டப் பொறியியலாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| செயற்றிட்டப் பெறுமதி: 25 மில்லியன் US$ இற்கு மேல் மற்றும் 200 மில்லியன் US$ இற்கு குறைவானவை | | | |
|---|---|---|---|
| **பதவிகள்** | **பதவிகளின் எண்ணிக்கை** | **வகுதி (02/2026 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்)** | **தகைமைகள்** |
| சிரேஷ்ட செயற்றிட்டப் பொறியியலாளர் | 01 | வகை C | 1. சிவில் பொறியியல் துறை அல்லது நிகரான துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவம்/ நிகரான தொழில்சார் தகைமை.<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் முகாமைத்துவ நிலையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 08 வருடகால அனுபவம்<br>அல்லது<br>2. சிவில் பொறியியல் துறை அல்லது நிகரான துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் கோப்பரேட் அங்கத்துவம் / நிகரான தொழில்சார் தகைமை.<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் முகாமைத்துவ நிலையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 06 வருடகால அனுபவம்<br>அல்லது<br>3. அகில இலங்கை அரசாங்க சேவையில் 1ஆம் வகுப்பு அரசாங்க அதிகாரி அல்லது நிகரான நிலைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் / நிகரான தொழில்சார் தகைமை.<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் |

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- ஊதியம், விதிகள் மற்றும் நிபந்தனைகள், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் 2026 மார்ச் 28ஆம் திகதிய 02/2026 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் காலமுறைத் திருத்தங்களுக்கு உட்பட்டு அமையும்.
- விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் திகதியில் விண்ணப்பதாரர்கள் அறுபத்து நான்கு (64) வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.
- நியமனம் ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் இருக்கும் திருப்திகரமான செயல்திறனின் அடிப்படையில், இது திட்டக் காலம் வரை நீட்டிக்கப்படலாம்.
- வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களில் உள்ள அனுபவம் மேலதிக அனுகூலமாக இருக்கும்.

செயற்றிட்ட தகவல்களுக்கு தயவு செய்து https://phsep.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

விபரமான அல்லது சுய தரவுகளுடன் (குறிப்பிட்ட வடிவம் இல்லை) கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி சகிதமான விண்ணப்பங்களை ‘‘சிரேஷ்ட செயற்றிட்டப் பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்” எனத் தலைப்பிட்டு 2026 ஆகஸ்ட் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

**முகவரி:**
**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
**191 ஏ, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், “The Bungalow”**
**தர்மபால மாவத்தை, கொழும்பு 07**
**மின்னஞ்சல்: info@phsep.lk,**
**தொலைபேசி: 011 2271150**

தேவையான தகைமைகள், அனுபவம், திறன் மற்றும் திறமைகளைக் கொண்டிராத, தாமதமான, முழுமையற்ற, ஆதரவு ஆவணங்கள் இணைக்கப்படாத, பதிவுத் தபால் அல்லாத வேறு முறைகளில் (மின்னஞ்சல், நேரடியாக ஒப்படைத்தல் அல்லது வேறேதாவது முகவரி) அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
**2026 ஆகஸ்ட் 17ஆம் திகதி.**